Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Life of Ancient Tamil People in *Nattrinai*

**M. Murugesan,** Assistant Professor, Department of Tamil,
Caussanel College of Arts and Science, Ramanathapuram, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-9312-7734
**DOI: 10.5281/zenodo.6622407**

## Abstract

*Sangam literature is a literal depiction of the lifestyle of the Tamil people. 'Ettuthokai' and 'Pattuppattu' are from Sangam literatures. One of the eight books on the subject is the anthology of many poems. This book was sung and later compiled. However, the 'Ettuthokai' songs are considered to be the most excellent of the Tamil Sangam texts. The poems trace the way of life, customs, and culture of the people. Thus food, hospitality, marriage, love, culture, sports, etc. are seen in the collection of the poems. Hence, this article propounds to decipher the life of the ancient Tamil people from 'Nattrinai'.*

**Keywords:** *Nattrinai*, Tamil, People, Life, Sangam, Literature.

## References

[1] Pinnathur Narayanaswami Ayyar Urai. *Nattrinai Moolamum Uraiyum.* Kalaga Veliyeedu, Chennai. 2007.
[2] Avvai Duraisamy Pillai Urai. Moolamum Uraiyum. Kalaga Veliyeedu, Chennai. 2001.
[3] Ilampooranar Urai, Tholkappiyam, Porulathikaram. Kalaga Veliyeedu, Chennai. 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# நற்றிணை காட்டும் பழந்தமிழ் மக்களின் வாழ்வியல்

**மு.முருகேசன்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-9312-7734
**DOI: 10.5281/zenodo.6622407**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைமைகளைச் சொல்லோவியங்களாக எடுத்துக்காட்டும் இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் என்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் அகநூல்களில் ஒன்று நற்றிணை ஆகும். இந்நூல் தனிப்பாடலாகப் பாடப்பட்டு பின்னர் தொகுப்பட்டது ஆகும். எனினும் எட்டுத்தொகை நூல்களில் மிகச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இந்நூல் மக்களின் வாழ்க்கை முறையினையும் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டினையும் எடுத்தோம்புகின்றது. அந்தவகையில் நற்றிணையில் இடம்பெறும் வாழ்வியல் சிந்தனைகளாக உணவு, விருந்தோம்பல், திருமணம், காதல், பண்பாடு, விளையாட்டு போன்றவை காணப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்**: நற்றிணை, தமிழ், மக்கள், வாழ்வு, சங்கம், இலக்கியம், உணவு, திருமணம், காதல், பண்பாடு, விளையாட்டு.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைமைகளைச் சொல்லோவியங்களாக எடுத்துக்காட்டும் இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் என்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் அகநூல்களில் ஒன்று நற்றிணை ஆகும். இந்நூல் தனிப்பாடலாகப் பாடப்பட்டு பின்னர் தொகுப்பட்டது ஆகும். எனினும் எட்டுத்தொகை நூல்களில் மிகச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இந்நூல் மக்களின் வாழ்க்கை முறையினையும் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டினையும் எடுத்தோம்புகின்றது. அந்தவகையில் நற்றிணையில் இடம்பெறும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நற்றிணை - அறிமுகம்**

நற்றிணை = நல் + திணை என பிரிக்கப்பட்டு நல்ல நில ஒழுக்கங்களை எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் அகம் என்னும் காதல் வாழ்வை எடுத்தோம்புகிறது. நல் என்னும் அடைமொழியைப் பெற்றது. இதற்கு நற்றிணை நானூறு என்னும் மற்றொரு பெயரும் உண்டு. ஒன்பது முதல் பன்னிரண்டு அடிகள் வரை பாடப்பெறும். இந்நூலைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். சுவடிகளில் எழுதப்பட்டு வந்த இந்நூல் பிற்காலத்தில் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டபோது முதன்மதலில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் தான் இயற்றிய புத்துரையுடன் 1915 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இதனையடுத்து பல உரையாசிரியர்கள் இந்நூலுக்கு உரை தந்துள்ளனர்.

**நற்றிணை காட்டும் வாழ்வியல்**

நற்றிணைப் பாடல்கள் வழியாக அக்கால பழந்தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றை அறியலாம். தலைவன் பிரிவால் வாடும் தலைவி அவன் வரவைச் சுவரில் கோடிட்டு காட்டும் வழக்கமும், தலைவன் வரவை பல்லி கூறுவதும் அம்மக்களின் நம்பிக்கையாகவும் இருந்துள்ளது. மேலும் மகளிர் கால்பந்து விளையாடும் பழக்கமும் இருந்துள்ளதை அறியலாம். பிற்காலத்தில் சிறந்து விளங்கிய தூது என்னும் சிற்றிலக்கிய வகைக்கு வழிகாட்டியாக குருகு, கிளி, நாரை ஆகியவற்றை தூதுவிடும் பாங்கினையும் அறியலாம். இவை தவிர மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, கொடைப்பண்பு, ஈகைப்பண்பு, மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றையும் அறிய முடிகின்றது. தெளிந்து வழியும் அருவி நீலமணிபோல காட்சியளிக்கின்றது. உயர்ந்த மலைப்பக்கத்தில் பொன்போல வேங்கை மலரின் தாது உதிர்ந்து காணப்படுகின்றது. பசிய கணுக்களை உடைய அசையும் மூங்கில்கள் மேகத்தின் அடிமுடிகளைத் தழுவுகின்றன. இத்தகைய மலைநாடன் முதலில் கூடிய காலத்து என் கைக்கொண்டு தன்கை ஒற்றியும் , தன்கைக்கொண்டு என் நெற்றியை நீவியும் தாயைப் போல சாலப் புரிந்து பேசினாள். இப்பொழுதோ கள்வன் போலக் கொடியன் என்று கூறினாள் எனதோழி பேசுவதை,

**"என்கைக் கொண்டு தன்கை ஒற்றியும்**
**தன்கைக் கொண்டு என்நல்நுதல் நீவியும்**
**அன்னை போல இனிய கூறியும்" (நற்றிணை, பாடல் எண்: 28 )**

என்ற முதுகூற்றனார் பாடல் தெளிவாக உணர்த்துகின்றது. இப்பாடலில் தலைவியின் காதல் வாழ்வு உணர்த்தப்படுகின்றது. தோழியருடன் விளையாடும்போது மணலுக்குள் புன்னங்கொட்டையை மறைத்து விளையாடினோம். அதனை எடுக்காமல் மறந்துவிட்டுச் சென்றுவிட்டோம். அது முளைத்துக் கொண்டது. மேலும் அது உனக்கு உடன்பிறந்தவள் என்று தாய் சொல்லி விட்டாள். எனவே எனக்கு உண்ணக் கொடுத்த பாலை அதற்கு ஊற்றி வளர்த்து வந்தேன். இப்போது மரமாக நிற்கிறது. தலைவா! அதன்கீழ் உன்னோடு சிரித்துக் கொண்டு விளையாட வெட்கமாக இருக்கின்றது. உயர்ந்த இந்த மரத்தின் நிழலில் பிறவும் பார்த்துக் கொண்டிருக்கும்போது பட்டப்பகலில் நீ எனக்கு உன்னைக் கொடுத்தால் எனக்கும் கூச்சமாக இருக்கின்றது எனத் தலைவி கூறுவதை,

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த கான்முளை ஆகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப" (நற்றிணை, பாடல் எண்: 172)**

என்ற பாடல் வழியாக அறியலாம். இப்பாடலில் தலைவி தலைவனோடு விளையாடும் நிகழ்வை உணர முடிகின்றது. தமிழனின் பண்பட்ட வாழ்வையும் ஏழு பிறப்பிலும் தான் திருமணம் செய்துகொண்ட தலைவனோடு நட்புறவுத் தொடர வேண்டும் என்பதை,

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்**
**பிறப்புப் பிறிதாகுவ தாயின் என்றும்**
**மறக்குவன் கொல்என் காதலன் எனவே" (நற்றிணை, பாடல் எண்: 397)**

என்ற பாடல் எடுத்துக் காட்டுகின்றது. இப்பாடலில் கணவன் மனைவி வாழ்க்கை முறை பற்றி சொல்லப்படுகினாறது. விருந்தோம்பல் மகத்துவத்தின் சிறப்பினையும் இரவு நேரத்திலும் விருந்து உபசரிக்கும் தமிழரின் வாழ்வின் அறத்தினை,

**"அல்லிராயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (நற்றிணை, பாடல் எண்: 142 )**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது. இப்பாடலில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனை இடம்பெற்றுள்ளது.

**மரபுச் சிந்தனைகள்**

மரபு பற்றிய செய்திகள் நற்றிணையில் அதிகமாகக் கொட்டிக் கிடக்கின்றன.

1. **வௌவால் கனவில் வந்தால் அனைத்தும் உண்மையாக நடக்கும் (நற்றிணை, பாடல் எண்: 48)**
2. **காதலன் வரவை பல்லி கூறுதல் (நற்றிணை, பாடல் எண்: 308)**
3. **தலைவி தோழியருடன் பந்து விளையாடுதல் (நற்றிணை, பாடல் எண்: 234)**
4. **கிளி, நாரை, குருகு ஆகியவற்றைத் தூதாக அனுப்புதல் (நற்றிணை, பாடல் எண்: 349)**
5. **தலைவன் வரும் நாளை தலைவி சுவற்றில் கோடிட்டு எண்ணுதல் (நற்றிணை, பா. எண்: 298)**

இவை போன்ற பல்வேறு மரபுக்கான செய்திகள் இந்நூலில் நிரம்பிக் கிடக்கின்றன. குறிஞ்சித் திணை காட்டும் வாழ்வியல், நற்றிணையில் கபிலர் பாடிய குறிஞ்சித் திணையில் பிரிவினை உணர்த்திய தலைவிக்குத் தோழி கூறுவதாக அமைந்த பாடலில் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனைக் கபிலர்,

**"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்**
**என்றும் என்தோள் பிரிவு அறியலரே…**
**…நீரின்றி அமையா உலகம் போலத்**
**தம்மின்றி அமையா நம்மைநயந்து அருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ? செய்வு அறியலரே" (நற்றிணை, பாடல் எண்: 1 )**

என்ற பாடல் மூலம் சுட்டிச் செல்கின்றார். இப்பாடலின் கருத்தாக பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், தாமரைத் தாது தலைவன் உள்ளத்திற்கும் சந்தனத் தாது தலைவியின் உள்ளத்திற்கும் உவமையாக்கி இருவருடைய கருத்தும் ஒத்தவழிச் சாந்திலே தீந்தேனிறால் வைத்தது போல தலைவன் தலைவியின்பால் அன்பு வைத்துள்ளான் என்று கூறுகின்றார் (நற்றிணை மூலமும் உரையும், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை). ஔவை துரைசாமி பிள்ளை கூறும்போது, தாமரைத் தேனைச் சந்தனம் தன் மணத்தை ஊட்டிச் சிறப்பிப்பது போல தன்பால் வைத்த புள்ளிய என் அன்பை உள்ளத்தில் கொண்டு கேண்மையாம் பெருமை உறுவித்தார் என்பார்( நற்றிணை மூலமும் உரையும், ஔவை துரைசாமி பிள்ளை உரை). இவ்விருவரும் தலைவன் தலைவியின் அன்பு வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றனர்.

**பாலத்திணை காட்டும் வாழ்வியல்**

தலைவனையும் தலைவியையும் பாலை நிலத்தில் கண்டவர்கள் சொல்வதுபோல் அமைந்துள்ள பதுமனார் பாடிய நற்றிணை பதுமனார் பாடலில் தலைவியின் பயணம் குறித்துப் பேசப்படுகின்றது. இதனைப் பதுமனார்,

**"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து**
**ஒலிவல் ஈந்தின் உலவை அம்காட்டு**
**ஆறுசெல் மாக்கள் சென்னி எறிந்த**

**செம்மறுந் தலைய நெய்த்தோர் வாய**
**வல்லிய பெருந்தலைக் குருளை மாலை**
**மான்நோக்கு இண்டுஇவர் ஈங்கைய சுரனே**
**வைஎயிற்று ஐயள் மடந்தைமுன் உற்று**
**எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்**
**காலொடு பட்ட மாரி**
**மால்வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே (நற்றிணை, பாடல் எண்: 2)**

என்ற பாடலின் வழியாக வெளிப்படுத்துகின்றார். இப்பாடலுக்கு பொ.வே.சோமசுந்தரனார், குடிப்பிறப்புடையாளை மயங்கி அவள் சுற்றத்தினின்றும் பெயர்த்து அழைத்தேகுகின்றார்என்னும் இறைச்சிப் பொருள் தோன்ற காலொடு பட்ட மாரி மால் வரை என்று கண்டோர் கூறுகின்றனர் என உரைக்கின்றார் (நற்றிணை மூலமும் உரையும், பொ.வே. சோமசுந்தரனார் உரை). இக்கருத்தை ஔவை துரைசாமிப் பிள்ளை கூறுகையில்,

**"பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி**
**வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்**
**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**
**கண்டோர் மொழிதல் கண்டது என்ப" (தொல்காப்பியம், பொருளதி., அகத்திணை. நூற்பா: 43)**

என்ற நூற்பாவைச் சுட்டிக் காட்டி இது செலவின்கண் கூறியது என உணர்த்துகின்றார். இவ்விருவரும் பயணம் மேற்கொள்ளுதல் பற்றிப் பேசுகின்றனர்.

**முடிவுரை**

நாகரிக வாழ்வை வாழ்ந்து காட்டிய தமிழனின் வாழ்வியலை நற்றிணைப் புலவர்கள் மிக அழகாக எடுத்துரைத்துள்ளனர். தலைவன் தனலவியின் அன்பு வாழ்க்கை, பயணம் மேற்கொள்ளுதல், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், காதல், மரபுச் செய்திகள் போன்றவைப் பேசப்பட்டுள்ளன. விருந்தோம்பலின் சிறப்பு உணர்த்தப்படுள்ளது. உலகத்தில் வாழும் உயிர்களை எல்லாம் உறவாக்கிக் கொள்ளும் பண்பாடு வெளிப்படுகின்றது. மக்களின் அற வாழ்க்கை, அன்பு வாழ்க்கை ஆகியவை தெள்ளத்தெளிவாகப் புலப்படுகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

[1] பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை. *நற்றிணை மூலமும் உரையும்*, கழக வெளியீடு, சென்னை.
[2] ஔவை துரைசாமிப் பிள்ளை உரை. *நற்றிணை மூலமும் உரையும்*. கழக வெளியீடு, சென்னை.
[3] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம், பொருளதிகாரம்*. கழக வெளியீடு, சென்னை. 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.